[3rd March 1969

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : கட்சி வேறுபாடின்றி 11 மணி வரையில் கூட்டத்திற்கு அனுமதி அளிக்கலாம் என்று இந்த அரசு உத்தரவிட்டிருக்கிறது.

திரு. எம். எத்திராஜுலு : அரசியல் அல்லாத மற்ற நிகழ்ச்சிகளுக்கு 11 மணி வரையில் கூட்டம் நடத்துவதற்கு அனுமதிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அப்படிப்பட்ட நிகழ்ச்சிகளுக்கு ஆங்காங்குள்ள காவல் துறை கண்காணிப்பாளர்களும் மற்ற காவல் துறையினரும் அவசியமான இடங்களில் தங்கள் விருப்பம்போல அவர்களுக்கு அனுமதி வழங்கலாம் என்று அனுமதி இருக்கிறது.

திரு. சா. கணேசன் : திருவிழாக்கள், இசைவிழாக்கள், தமிழ் விழாக்கள் ஆகியவை இரவு 12 மணி வரைவில், ஏன், காலை 4; 5 மணி வரையில்கூட நடைபெற இதுவரையில் காவல் துறையினர் அனுமதித்து வந்திருப்பது அரசுக்கு தெரியும் அல்லவா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தெரியும். அந்த நிலை விரியும்.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவர் அவர்களே, சாதாரணமாக 10 மணி அளவில் அனுமதியைக் கீழே உள்ள போலீஸ் உத்தியோகஸ்தர்கள் வழங்குகிறார்கள். அதற்கு மேலே வேண்டுமென்றால் சூப்ரண்ட் ஆஃப் போலீஸ் வரையிலும் போக வேண்டியிருக்கிறது. அதை மாற்றி இப்போது 10 மணி வரையில் கொடுப்பவர்களே 11 மணி வரையிலும் அனுமதிக்க அதிகாரம் கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : யோசனையைப் பரிசீலிக்கலாம்.

திரு. சி. வி. ராஜகோபால் : இரவு நேரத்தில் பழைய காலத்தில் தெருக்கூத்துக்கள் காலை 5 மணி வரையில் நடக்கும். அப்படி நடைபெறும் பழைய முறைப்படி தெருக்கூத்துகளுக்கு சர்க்கார் அனுமதிக்குமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : எந்தக் கூத்தாக இருந்தாலும் ஒழுங்கான முறையில் நடைபெற்றால் காவல்துறை கண்காணிப்பாளர் தருகிற ஒப்புதல்பேரில் அனுமதி நிச்சயமாக வழங்கப்படும்.

Complaint against a Police Constable

*92 *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether a Police Constable raped a girl recently at the Sirkazhi Police Station;

(*b*) whether a complaint was lodged in this regard; and

(*c*) if so, the action taken against the constable?

3rd March 1969]

கான்ஸ்டபிள் மீது புகார்

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) சீர்காழி காவல் நிலையத்தில் கான்ஸ்டபிள் ஒருவர் அண்மையில் ஒரு பெண்ணை கற்பழித்தாரா?

(இ) இதுபற்றி புகார் செய்யப்பட்டதா?

(உ) ஆமெனில், அவர் மீது எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) இதுபற்றி விசாரணை செய்த மாயூரம் வருவாய்க் கோட்ட அதிகாரியின் முடிவு எதிர் மறையாக உள்ளது.

(இ) ஆம்.

(உ) காவல் துறை நிலை ஆணைகளின் சில விதித்துறைகளை மீறியதற்காக, இந்நிகழ்ச்சியில் சம்பந்தப்பட்ட காவலர்மீது நடவடிக்கை யெடுக்க அரசு கருதியுள்ளது.

திரு. என். ஆர். தியாகராஜன்: தலைவர் அவர்களே, சில விதித் துறைகளை மீறியதற்காக என்று அமைச்சர் கூறினார்கள். என்ன விதிகளை மீறினார் ? நான் கேள்வியில் கேட்டிருப்பதைப்போல ஏதாவது நடந்ததா அல்லது வேறு ஏதேனும் தவறு செய் தாரா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: சகுந்தலா என்ற ஒரு பெண் இரண்டு முறை திருட்டுக் குற்றம் சாட்டப்பட்டுத் தண்டிக்கப் பட்டார். மூன்றாவது திருட்டுக் குற்றம் சாட்டப்பட்டு ரிமாண்டில் வைக்கப்பட்ட நேரத்தில், அங்கே ஒரு தவறு நடந்ததாக ஒரு தந்தி காவல் துறை மேலதிகாரிக்கு அனுப்பப்பட்டது. உடனடி யாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று காவல்துறைக்கு உத்தரவு இடப்பட்டது. உடனே அந்தக் காவலரை வேலையி லிருந்து தற்காலிகமாக நீக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதை விசாரித்த மாயவரம் கோட்ட ஆட்சித் தலைவருடைய முடிவு, விசாரணை திருப்திகரமாக இல்லை என்ற விசாரணை முடிவு, தாமதமாக அரசுக்கு அனுப்பப்பட்டது என்பதால், கோட்ட ஆட்சித் தலைவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கேட்கப்பட்டது. அதுதான் உறுப் பினரின் கேள்விக்கு விளக்கம். எப்போதுமே காவல்துறையில் ஒரு பெண்ணை போலீஸ் ஸ்டேஷனில் காவலில் வைக்கும்போது இன்னொரு பெண்ணைத் துணைக்கு வைக்க வேண்டுமென்றிருக் கிறது. அப்படி வைக்க அந்தக் காவலர் தவறிவிட்டார் என்பதற் காக நடவடிக்கை எடுக்க அரசு உத்தரவிட்டிருக்கிறது.

திரு. என். ஆர். தியாகராஜன்: இதைப்போன்ற ஒரு புகார் மதுரை ஜில்லாவில் செம்பட்டியில் நடந்தது என்று சட்டமன்றத் தில் கேள்வி கேட்டேன். நான் கேள்வி கேட்கும் வரையில் அந்த

விவகாரம் விசாரிக்கப்படவில்லை. அந்த கான்ஸ்டேபிள்மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. கேள்வி கேட்டபிறகு என்னிடம் வந்து கேட்டார்கள், 'நீங்கள் என்ன சொல்கிறீர்கள், பாவம் அந்த ஆளின் குடும்பம் கெட்டுப்போகும், நடவடிக்கை எடுக்கலாமா' என்றார்கள். நான் அவர்களிடம் 'உங்கள் இஷ்டம் போல் செய்யுங்கள்' என்று சொல்லிவிட்டேன். அப்படிச் சட்ட மன்றத்தில் கேட்ட பிறகுதான் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளின் பேரில் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. மற்ற நேரங்களில் இல்லை. ஆகையால் திட்டவட்டமாகப் போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துச் செல்லப்படும் பெண்களின் கற்புக்குப் பாதகம் இல்லாமல் ஏற்கனவே முதலமைச்சர் சொன்னமாதிரி நல்லவகையில் பாதுகாப்புத் தர அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அதிகாரிகள் சிலர் தவறாக நடக்கிறவர்கள் இருப்பார்கள். எந்த சர்க்காரிலும், எப்போதும் அது தவிர்க்க முடியாத குறையாகும். உறுப்பினர் அவர்கள் கேள்வி கேட்ட இடத்தைப் பொறுத்தவரையில், அந்தக் காலக் கட்டத்தில், அந்தப் புகாரைத் தெரிந்தவுடனே அரசுக்கு எழுதி அனுப்பி, அது கேட்கப்படாமல் இருந்தால்தான் குறையாகக் கருத முடியுமே தவிர வேறல்ல.

Police Firing

* 93 *Q.*—THIRU N. R. THIAGARAJAN: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the number of times firing was resorted to in Tamil Nadu from 6th March 1967 to 31st March 1968;

(*b*) the number of rounds fired; and

(*c*) the number of persons injured?

துப்பாக்கிப் பிரயோகம்

திரு. என். ஆர். தியாகராஜன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 6—3—1967 முதல் 31—3—1968 வரை தமிழ்நாட்டில் எத்தனை முறை துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது?

(இ) எத்தனை ரவுண்டுகள் சுடப்பட்டன?

(உ) எத்தனை பேர் காயமடைந்தனர்?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: (அ) 9 முறை துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது.

(இ) 52 சுற்றுகள் சுடப்பட்டன.

(உ) 19 பேர் காயமடைந்தனர்.

திரு. என். ஆர். தியாகராஜன்: தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியிலே எத்தனை பேர்கள் இறந்தார்கள் என்ற விவரம் இல்லை. ஏற்கனவே பழைய முதலமைச்சர் அவர்கள் இனிமேல் இத்தகைய